செய்தி வெளியீட்டு எண்:169 நாள்: 07.06.2021

# புதிய ஆக்ஸிஜன் படுக்கைகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆகியோர் தொடங்கி வைத்தனர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அரசு மருத்துவமனை மற்றும் சங்கராபுரம் அரசு மருத்துவமனைகளில் 46 புதியதாக ஆக்ஸிஜன் படுக்கைகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆகியோர் இன்று (07.06.2021) தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளுக்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாஉள்ஹக்,இ.கா.ப., கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தா.உதயசூரியன்(சங்கராபுரம்), திரு.க.கார்த்திகேயன் (ரிஷிவந்தியம்), திரு.ஏ.ஜெ.மணிகண்ணன் (உளுந்தூர்பேட்டை), திரு.மா.செந்தில்குமார் (கள்ளக்குறிச்சி) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அனைத்து கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கொரோனா நோய்த் தொற்று சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இம்மையங்களில் ஆக்ஸிஜன் படுக்கை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இன்று சின்னசேலம் அரசு மருத்துவமனையில் 22 ஆக்ஸிஜன் படுக்கைகளும், 24 ஆக்ஸிஜன் அல்லாத படுக்கைகளும், சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் 24 ஆக்ஸிஜன் படுக்கைகளும், 21 ஆக்ஸிஜன் அல்லாத படுக்கைகளும் மற்றும் 11 பொது மருத்துவ படுக்கைகளும் நோயாளிகளின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை) மரு.செல்வவிநாயகம், கள்ளக்குறிச்சி சார் ஆட்சியர் திரு.ஸ்ரீகாந்த்,இ.ஆ.ப., இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு.சண்முககனி, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஏ.உஷா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.சதீஷ்குமார், கோவிட் தடுப்பு பொறுப்பு அலுவலர் மரு.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

செய்தி வெளியீட்டு எண்:170 நாள்: 07.06.2021

# கொரோனா சிகிச்சை மையங்களை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் ஆய்வு செய்தார்

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கோவிட்-19 TRICARE மையம், திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையம், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டள்ள கொரோனா சிகிச்சை மையம் ஆகியவற்றையும், வானாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமினையும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (07.06.2021) ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாஉள்ஹக்,இ.கா.ப., கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தா.உதயசூரியன் (சங்கராபுரம்), திரு.க.கார்த்திகேயன் (ரிஷிவந்தியம்), திரு.ஏ.ஜெ.மணிகண்ணன் (உளுந்தூர்பேட்டை), திரு.செந்தில்குமார் (கள்ளக்குறிச்சி) ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, மாவட்டங்கள் தோறும் ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், தமிழக அரசின் சீரிய நடவடிக்கைகளால் இன்று கள்ளக்குறிச்சி மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் ஆக்ஸிஜன் படுக்கை வசதிகள்கூட காலியாக உள்ளது. மேலும், தமிழகம் முழுவதும் ஆக்ஸிஜன் மற்றும் மருந்து தட்டுப்பாடு, தடுப்பூசி தட்டுப்பாடு போன்ற எந்தவொரு தட்டுப்பாடும் இல்லாமல் அனைத்து மருத்தவ வசதிகளும் பொதுமக்களுக்கு கிடைத்திடும் வகையில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் தமிழகம் முழுவதும் 37,000 படுக்கைகள் காலியாக உள்ளது. தேவைக்கு அதிகமாக ஆக்ஸிஜனும் கையிருப்பில் உள்ளது. மேலும், மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தினந்தோறும் அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமானப் பணிகள் இவ்வாண்டுக்குள் முடிக்கப்பட்டு, வரும் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 2,000 மருத்துவர்கள், 6,000 செவிலியர்கள், 3,700 மருத்துவ களப்பணியாளர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 30 மருத்துவர்கள், 68 செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், திருக்கோவிலூர், முக்கிய பகுதிகளில் ஒன்றாகவும், கிராமப்புறங்களை அதிகமாக உள்ளடக்கிய பகுதியாகவும், பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் இப்பகுதியில் உள்ள அரசு வட்டார மருத்துவமனையை, அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 06.06.2021 வரை RT-PCR பரிசோதனை மூலம் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 22,992. இதில் 18,539 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். இதில் 147 நபர்கள் தொற்றினால் உயிரிழந்துள்ள நிலையில் 4,306 நபர்கள் தொற்றினால் பாதிக்கப்பட்டு தற்போது சிகிச்சைப்பெற்றுவருகின்றனர். தொற்று உறுதி

செய்யப்பட்டவர்களில் நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் 1,045 நபர்களும், கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் 3,261 நபர்களும் ஆவர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கொரோனா நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகள் 84 உள்ளது. இதில் கிராமப்புறங்களில் 54 பகுதிகளும், நகர்ப்புறங்களில் 30 பகுதிகளும் உள்ளன. கொரோனா நோய்த்தொற்றிற்கான தடுப்பூசிகள் நேற்று (06.06.2021) வரை 1,04,405 (Doses) தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 78,542 (Doses) தடுப்பூசிகள், 18 முதல் 45 வயது வரை உள்ளவர்களில் 25,863 (Doses) தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவனை செலுத்தப்பட்வை 83,187 (Doses), இரண்டாம் தவனை செலுத்தப்பட்டவை 21,218 (Doses).

கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 200-ஆக இருந்த ஆக்ஸிஜன் படுக்கைகளின் எண்ணிக்கை 400-ஆகவும், 4 தாலுக்கா மருத்துவமணைகளில் புதியதாக மொத்தம் 95 ஆக்ஸிஜன் படுக்கைகளும், கள்ளக்குறிச்சி ஏ.கே.டி பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள கோவிட் கண்காணிப்பு மையத்தில் 24 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளுடன் கூடிய படுக்கை வசதிகளும் என மொத்தமாக 319 ஆக்ஸிஜன் படுக்கைகள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இதுவரை 2 தனியார் மருத்துவமணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு 100 படுக்கைகளில் சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில், தற்போது மேலும் 7 தனியார் மருத்துவமணைகளுக்கு கூடுதலாக அனுமதி வழங்கப்பட்டு மொத்தமாக 325 படுக்கை வசதிகளில் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

மாவட்டத்தில் 9 இடங்களில் 1,630 படுக்கை வசதிகளுடன் கூடிய கோவிட் கண்காணிப்பு மையங்கள் செயல்பட்டு வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 270 படுக்கைகளும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கிடும் வகையில் தயார் நிலையில் உள்ளது. இதில் மேலூர் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள 30 படுக்கைகள் மாவட்ட தாய் சேய் நலனிற்காக பிரத்தியேக இடைக்கால கோவிட் கண்காணிப்பு மையமாக (Interim Covid Care Centre) செயல்பட்டு வருகிறது. 60 படுக்கைகளுடன் கூடிய பிரத்தியேக கோவிட் சித்த மருத்துவ மையம் உளுந்தூர்பேட்டை வட்டம், பாலி கிராமத்தில் உள்ள ஜே.எஸ்.ஏ சித்தா மருத்துவக்கல்லூரியில் செயல்பட்டு வருகிறது.

எதிர்வரும் ஆக்ஸிஜன் தேவைகளை கருத்தில் கொண்டு மாவட்டத்தில் கூடுதலாக 110 எண்ணிக்கையிலான D-வகை ஆக்ஸிஜன் உருளைகள் மற்றும் 33 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொரோனா விதிமிறல்கள் மீது 25,547 எண்ணிக்கையிலான நடவடிக்கைகள் தொடரப்பட்டு அபராத தொகையாக ரூ.59,49,100/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேசினார்.

இவ்வாய்வுகளின்போது, கள்ளக்குறிச்சி சார் ஆட்சியர் திரு.ஸ்ரீகாந்த், இ.ஆ.ப., இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை) மரு.செல்வவிநாயகம், திருக்கோவிலூர் சார் ஆட்சியர் செல்வி.சாய்வர்தினி, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு.சண்முககனி, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஏ.உஷா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.சதீஷ்குமார், கள்ளக்குறிச்சி மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மரு.எஸ்.சுகந்தன், உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.கதிரவன், கோவிட் தடுப்பு பொறுப்பு அலுவலர் மரு.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.